


இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 11-06-2025


# எந்த லோகத்தில் இருக்கிறார் அமித்ஷா?

**தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடிக்கப் போகிறாராம் அமித்ஷா? அவர் எந்த லோகத்தில் இருக்கிறார் என்றே தெரியவில்லை!**

தமிழ்நாட்டில் 39 நாடாளுமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. அதில் ஒரு தொகுதியில் கூட பா.ஜ.க. வெற்றி பெறவில்லை. பா.ஜ.க. கட்டிய புதிய நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பா.ஜ.க. உறுப்பினர் ஒருவர் கூட உள்ளே இல்லை. தமிழ்நாட்டில் இருந்து ஒரு பா.ஜ.க. உறுப்பினர் கூட மாநிலங்கள் அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளே செல்லவில்லை.

தமிழ்நாட்டில் மொத்தம் 234 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. இதில் நாலே நாலு பேர் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள். அவர்களும் கடந்த முறை அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து - அ.தி.மு.க. தயவால் உள்ளே சென்றவர்கள். தனித்து நின்று பா.ஜ.க. அடைந்த வெற்றி அல்ல இது.

இந்த லட்சணத்தில்தான் பா.ஜ.க. ஆட்சியை அமைக்கப் போகிறது தமிழ்நாட்டில் என்று சொல்லி இருக்கிறார் அமித்ஷா. அதனால் உஷாராக, 'எங்கள் கூட்டணி' என்கிறார் அமித்ஷா. "வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றியைப் பெறும்" என்று சொன்னார். பிறகு, "அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி ஆட்சியை அமைக்கும்" என்றார் அமித்ஷா. 'அ.தி.மு.க. ஆட்சியை அமைக்கும்' என்று எடப்பாடி பழனிசாமியே இன்னும் நம்பவில்லை. ஏனென்றால் அவருக்குத் தெரியும், அ.தி.மு.க. கடந்த ஏழு ஆண்டுகளாக தொடர் தோல்வியை மட்டுமே சந்தித்து வருகிறது என்று!

**2019 - நாடாளுமன்றத் தேர்தல்**
**2019 - சட்டமன்ற இடைத்தேர்தல்**
**2019 - 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல்**
**2021 - ஊரக உள்ளாட்சித் தேர்தல்**
**2021 - தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்**
**2022 - நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்**
**2023 - ஈரோடு இடைத்தேர்தல்**
**2024 - நாடாளுமன்றத் தேர்தல்**

**2024 விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தல் ஆகிய 9 தேர்தல்களிலும் தோற்றவர்தான் பழனிசாமி. எனவே, அடுத்த சட்டமன்றத் தேர்தலிலும் தோல்வியையே பரிசாகப் பெறத் தயாராகி வருகிறார் பழனிசாமி. இப்போது அவர் வைத்திருக்கும் சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை பாதியாகக் குறையப் போகிறது. அதுதான் களநிலவரம் ஆகும்.**

அவரே மூழ்கிக் கொண்டு இருக்கிறார். மூழ்கிக் கொண்டிருப்பவரின் தோளைப் பிடித்து தப்பிக்கப் பார்க்கிறது பா.ஜ.க. மூழ்கிக் கொண்டிருப்பவரின் தோளைப் பிடித்தால் இரண்டு பேரும் மூழ்க வேண்டியதுதான் இயற்கை ஆகும். அதனைத்தான் அடுத்த தேர்தலில் பார்க்கப் போகிறோம். இதற்கு மத்தியில்தான் அமித்ஷாக்களின் தலைப்புச் செய்திகள்.

ஆறு மாதத்துக்கு ஒரு முறை தமிழ்நாடு வந்து இதுபோன்ற அளப்புகளை அளந்துவிட்டுச் செல்வது அமித்ஷாக்களின் வழக்கம். 'எத்தனை ஷாக்கள் வந்தாலும் தி.மு.க.வை தோற்கடிக்க முடியாது' என்றார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஆமாம்! இது உண்மைதான் என்பதை அமித்ஷா ஒப்புக் கொண்டிருக்கிறார். அதுதான் அவரது மதுரைப் பிரகடனம் ஆகும்.

"ஷாவால் முடியாமல் போகலாம், தமிழக மக்கள் அதைச் செய்வார்கள்" என்று தமிழ்நாட்டு மக்கள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு மதுரையில் இருந்து போய்விட்டார் அமித்ஷா. அடுத்த ஆறு மாதம் கழித்து வரலாம் அவர். அமித்ஷாவை ஏதோ மந்திரவாதியைப் போல பா.ஜ.க. நினைத்து வைத்திருந்தது. அதில் மண் அள்ளிப் போட்டுவிட்டார் அமித்ஷா.

**'மலையைத் தூக்கப் போகிறேன்' என்று ஒருவர் ஊருக்குள் வந்த கதை அனைவரும் அறிந்த பழைய கதைதான். மலையைத் தூக்கப் போகிறார் என்பதற்காக ஆறு மாதங்கள் அவருக்கு அந்த ஊரே சோறு போட்டது. மலையைத் தூக்கக் குறிக்கப்பட்ட நாளும் வந்தது. பல்லாயிரக்கணக்கானவர்கள் அதனைப் பார்க்க வந்தார்கள். கூலாக அந்த ஆள் சொன்னார்: "எல்லோரும் சேர்ந்து தூக்கி என் தோளில் வையுங்கள்" என்றார். அப்படித்தான் இருக்கிறது அமித்ஷாவின் பேச்சுகள்.**

ஆக்கவும் அழிக்கவும் வல்லவராகச் சொல்லிக் கொண்ட அமித்ஷா, "தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொள்வார்கள்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். தமிழ்நாட்டு மக்கள் தி.மு.க.வை தங்கள் தலையில் தூக்கிக் கொண்டாடு வதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோமே. மொத்தமுள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளையும் தி.மு.க. கூட்டணிக்காக அள்ளிக் கொடுத்தவர்கள் தமிழ்நாட்டு மக்கள். தமிழ்நாடு என்ற மலை மீது, மகத்தான மாமனிதர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களை அமர வைத்துத் தூக்கிக் காட்டிவிட்டார்கள் தமிழ்நாட்டு மக்கள். இதெல்லாம் அமித்ஜி அறிவாரா?

ஏழெட்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டில் இருந்து வெளியாகும் தேர்தல் முடிவுகளை முதலில் வாங்கிப் பாருங்கள் ஜி!. அதில் பா.ஜ.க. நிலைமை என்ன, அ.தி.மு.க. நிலைமை என்ன என்று பாருங்கள்.

ஆந்திராவைத் தாண்டினால் தமிழ்நாடுதான் என்பது மாதிரியான விமானப் பயணமல்ல தேர்தல். 'ஒடிசாவைப் பிடித்தோம், டெல்லியைப் பிடித்தோம், மகாராஷ்டிராவைப் பிடித்தோம், அது போல தமிழ்நாட்டைப் பிடிப்போம்' என்பது சுற்றுலா பயணம் அல்ல. இது அரசியல். இந்த நுட்பமான அரசியலை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா அவர்கள் மிகச் சரியாகச் சொன்னார்கள். **"இது தமிழ்நாடு. பா.ஜ.க.வுக்கு எதிரான அரசியல் கருத்தியல் தமிழ்நாட்டில் மட்டும் தான் இருக்கிறது. எனவே இங்கே பா.ஜ.க. வெல்ல முடியாது"** என்று மிகச் சரியாகச் சொல்லி இருக்கிறார். இந்தக் கள நிலவரத்தை அரசியல் யதார்த்தம் அறியாமல் ஆறு மாதத்துக்கு வரும் ஆன்மிக பயணத்தை அரசியல் பயணமாகக் கணக்குக் காட்டிக் கொண்டிருக்கிறார் அமித்ஷா.

அவர் உள்துறையைக் கவனிக்கும் அமைச்சர் அவ்வளவு தான். இந்திய நாட்டின் விதியைத் தீர்மானிப்பவர் அல்ல என்பதை ஊடகங்கள் முதலில் உணர வேண்டும். 'அமித்ஷா வருகிறார்' என்பதற்காக அவர்கள் காட்டும் அலப்பறைகள் அருவெறுப்பாக இருக்கிறது.

'தினத்தந்தி'யில் (9.6.2025) தலைப்புச் செய்தியாக அமித்ஷாவின் பரபரப்பு பேச்சு இடம் பெற்றுள்ளது. அவர் பரப்பாக பேசும் படமும் இடம் பெற்றுள்ளது. அதற்கு கீழே என்ன செய்தி தெரியுமா? "மணிப்பூரில் மீண்டும் வன்முறை வெடித்தது" என்பதுதான் அந்தச் செய்தி. இன்று நேற்றல்ல இரண்டரை ஆண்டு காலமாக மணிப்பூர் எரிந்து கொண்டிருக்கிறது. உள்துறை அமைச்ச ரால் அங்கு அமைதியை ஏற்படுத்த முடியவில்லை. பா.ஜ.க. ஆண்ட மாநிலம் அது. பிரதமர் இதுவரை அங்கு போகவே இல்லை. நாடாளுமன்றத் தேர்தல் நேரத்திலும் வாக்கு கேட்டு போகவில்லை. உள்துறை அமைச்சர் ஓரிரு முறை சென்றிருக்கலாம். ஆனால் அமைதி போய் பல ஆண்டுகள் ஆகிவிட்டது.

**பா.ஜ.க. ஆளுகையில் ஒரு மாநிலம் எப்படி ஆகும் என்பதற்கு உதாரணம் மணிப்பூர். எல்லா மாநிலத்தையும் இப்படி ஆக்கப் பார்க்கிறார்கள். கொத்தடிமைக் கூட்டமான பழனிசாமியை மிரட்டி உட்கார வைத்திருக்கிறார்கள். அவரது தோளில் ஏறப் பார்க்கிறார்கள். மூழ்கப் போகிறார்கள். தமிழ்நாட்டில் பா.ஜ.க. கும்பல் அடையப் போகும் தோல்வியானது, அதனுடைய வகுப்புவாத, எதேச்சதிகாரப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தேர்தலாகவே அமையும்.**





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.6.2025) பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் 1.85 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சென்னை புத்தகப் பூங்காவை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.6.2025) பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் உருவாக்கப்பட்ட 84 நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில்

# ரூ.1.85 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள சென்னை புத்தகப் பூங்கா!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 11 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.6.2025) பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் 1.85 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சென்னை புத்தகப் பூங்கா, பொது நூலக இயக்ககம் சார்பில் 29.80 கோடி ரூபாய் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் கட்டப்பட்டுள்ள 110 கூடுதல் நூலகக் கட்டடங்கள், பரமக்குடி முழுநேர கிளை நூலகக் கட்டடம் மற்றும் 70 சிறப்பு நூலகங்களை திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் உருவாக்கப்பட்ட 84 நூல்களை வெளியிட்டு, தமிழ்நாடு பாடநூல் கழக நூல்கள் விற்பனைக்கான மின்வணிக இணைய தளத்தையும் தொடங்கி வைத்தார்.

### தமிழ் - ஆங்கிலம் பிறமொழி நூல்கள்!

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளில் இணைய வசதி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட இல்லம் தேடி கல்வி, நம் பள்ளி நம் பெருமை, எண்ணும் எழுத்தும், நம்ம ஸ்கூல் பவுண்டேசன், திறன் வகுப்பறைகள் அமைத்தல், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம் அமைத்தல், மாதிரி பள்ளிகளை உருவாக்குதல், பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற சிறப்புத் திட்டங்களோடு, அனைத்து மாவட்டங்களிலும் புத்தக கண்காட்சி, சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் மாபெரும் நூலகங்கள், மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா பாடநூல்கள் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் 1.85 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சென்னை புத்தகப் பூங்காவை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார். இந்தப் புத்தகப் பூங்காவில் பல்வேறு பதிப்பாளர்களால் வெளியிடப்படும் தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மொழி நூல்களும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வெளியிட்டுள்ள உயர்கல்வி பாடநூல்கள், இலக்கிய மொழிபெயர்ப்பு நூல்கள், நாட்டுடைமை நூல்கள், போட்டித் தேர்வு நூல்கள், சிறார் இலக்கிய நூல்கள் மற்றும் பள்ளிப் பாடநூல்கள் ஆகியவை கிடைக்கும்.

### 84 நூல்கள் வெளியீடு!

இந்த நிகழ்ச்சியின்போது, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் திசைதோறும் திராவிடம், முத்தமிழ் அறிஞர் மொழிபெயர்ப்பு திட்டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட 84 நூல்களை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கல்விப் பணியிலும் தமிழ்ப் பணியிலும் ஈடுபட்டு வரும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் நூல்களை வெளி மாநிலத்தவர்கள் மற்றும் வெளிநாட்டினர் எளிதில் வாங்குவதற்கு வழிவகை செய்யும் வகையில் இணைய வழி விற்பனைக்கான மின்வணிக இணையதள வசதியையும் (www.tntextbooksonline.com) முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

### 352 நூலகக் கட்டடங்கள் திறப்பு!

மேலும், பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் நூலகங்களுக்கு மாநிலங்களுக்கு மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ், 821 பொது நூலகங்களுக்கு கூடுதல் கட்டடம் கட்டுதல், தேவையான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், கணினி தொடர்புடைய சாதனங்கள் மற்றும் புத்தகங்கள் வாங்குதல் போன்றவற்றிற்கு சிறப்பு நிதியுதவியாக 213 கோடியே 46 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இதில் ஒரு நூலகக் கட்டடம் 500 சதுர அடி பரப்பளவில் என 821 பொது நூலகங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 352 நூலகக் கட்டடங்கள் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது அனைத்து மாவட்டங்களிலும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் 24 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 110 கூடுதல் நூலகக் கட்டடங்கள், 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நூல்கள், 1 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், 60 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கணினி தொடர்புடைய சாதனங்கள்,

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில்

70 இலட்சம் ரூபாய் செலவில் 1050 சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள முழுநேர கிளை நூலகத்திற்கான புதிய கட்டடம் மற்றும் பேருந்து நிலையங்கள் / மருத்துவமனைகள் / மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் என மக்கள் அதிகம் கூடும் இடங்களில் 49.78 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 70 சிறப்பு நூலகங்கள், என மொத்தம் 29.80 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள நூலகங்கள் மற்றும் நூலகக் கட்டடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன்,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. பி. சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் துணைத் தலைவர் எழுத்தாளர் இமயம், புத்தக பதிப்பாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.